

# வழித்தடங்களை மறைத்த கடைப் பொருட்கள்

## டிபிகேஎல் நடவடிக்கை

கோலாலம்பூர், நவ. 15-

தலைநகரில் பல பகுதிகளில் வழித்தடத்தை மறைத்திருப்பதாக அடையாளம் காணப்பட்ட கடைகளின் பொருட்களை கோலாலம்பூர் மாநகர் மன்ற (டிபிகேஎல்) பறிமுதல் செய்தது. டேசா பண்டான், ஜாலான் கம்போங் பண்டான், ஜாலான் ராஜா மூடா மூசா, ஜாலான் மக்தாப், ஜாலான் மாயாங் சாரி ஆகிய பகுதிகளில் பொது வழித்தடம், நடைபாதையில் வைக்கப்பட்டிருந்த நாற்காலிகள், மேஜைகள், சிறு அளவிலான கூடாரங்கள், இதர தளவாடப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதாக டிபிகேஎல் தரப்பு அறிக்கை வெளியிட்டுள்ளது.

மேலும் சிறப்பு நடவடிக்கையின் வாயிலாக சம்பந்தப்பட்ட 4 கடைகள், ஒரு வியாபாரி மீது 1974 கட்டட, சாலைச் சட்டம் பிரிவு 46 (1)(டி) கீழ் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் அனைத்தும் தாமான் மிஹார்ஜா, செராஸ், ஜாலான் லொம்போங்கில் உள்ள டிப்போவிற்கு கொண்டு செல்லப்பட்டது. பொதுமக்கள் வழங்கிய புகாரின் அடிப்படையில் இந்தப் பறிமுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

தித்தி வங்சா நாடாளுமன்றத்தில் உள்ள பகுதிகள் சீராகவும் பாதுகாப்பாகவும் இருப்பதை உறுதிசெய்ய இந்நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதாகவும் கோலாலம்பூர் மாநகர் மன்றத் தரப்பு அறிக்கை வெளியிட்டுள்ளது.